# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 116/2025 | LW– 1 | PW– 1 |

| | |
|---|---|
| Name | : சுரேஷ்குமார் ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : சின்னதம்பி |
| Village | : தலைமை காவலர், நத்தம் காவல் நிலையம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் மூக்கன், ராசு, துரையன், முத்துக்கிருஷ்ணன், அழகுராஜா, ரமேஷ், பொன்னர், சக்திவேல் ஆகிய 8 பேர் 13.02.2025ம் தேதி இரவு 8.00 மணிக்கு செந்துறை – குரும்பபட்டி சாலையில் அமைந்துள்ள அரசு மதுபான கடை எண்.3337ன் அருகே நான் ரோந்து பணியில் இருந்தபோது மேற்படி எதிரி மூக்கன் என்பவர் மதுபானக் கடையின் அட்டைப் பெட்டியுடன் மதுபானம் கேட்டு தகராறு செய்ததாக மேற்படி கடையின் விற்பனையாளரான செல்வராஜ் என்பவர் என்னிடம் கூறினார். அதன்பேரில் நான் மேற்படி கடைக்கு சென்று மூக்கன் என்பவரிடம் ஏன் அட்டைப் பெட்டியோடு அதிகப்படியான மதுபாட்டில்கள் கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் என்னைப் பார்த்து போலீஸ்னா நீ என்ன சுன்னியாடா நீ யாருடா எங்களை

கேட்குறதுக்கு என்று அசிங்கமாக பேசினார். நான் அவரிடம் மரியாதையாக பேசு என்று சொன்னேன். மூக்கன் என்னை கையால் அடித்து முகத்தில் குத்தி கீழே தள்ளிவிட்டார். அப்போது மூக்கனும் அவருடன் வந்திருந்த ஆஜர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து ஏண்டா புண்ட மகனே, போலீஸ்னா நீ என்ன பெரிய புழுத்தியாடா என்று அசிங்கமாக திட்டிக் கொண்டே அனைவரும் சேர்ந்து கையால் மாறி மாறி உடம்பு முழுவதும் அடித்தார்கள். மேலும் என்னை கழுத்திலும், முகத்திலும் கைகளை மடித்துக் கொண்டு குத்தினார்கள். பொன்னரும், சக்திவேலும் பக்கத்து கடையில் இருந்த விளம்பர பலகையை எடுத்து எனது முதுகிலும், கையிலும் அடித்தார்கள்.

2. அப்போது அருகில் இருந்த டீக்கடை மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து விலக்கிவிட்டார்கள். அப்போது எதிரிகள் என்னைப் பார்த்து போலீஸ்னா நீ என்ன பெரிய புழுத்தியாடா, உன்னை கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் எனக்கு பயம் வந்துவிட்டது. அருகில் இருந்தவர்கள் என்னை போக்கு ஆட்டோவில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வரும் வழியில் நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். அதன்பேரில் மருத்துவமனைக்கு வந்த தலைமைக் காவலர் 2259 திரு.கண்ணன் என்பவர் என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். மருத்துவர் என்னை விசாரித்தபோது அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு செந்துறை சாலையில் உள்ள மதுபான கடையில் வைத்து தெரியாத 20 ஆண்கள் என்னை தாக்கியதாக கூறினேன்.

3) நான் மேற்படி மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது கடந்த 14.02.2025ம் தேதி பகல் 1.00 மணியளவில் நத்தம் சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் சிகிச்சையில் இருந்த என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அவர் வாசித்ததை கேட்டு சரியாக

இருந்ததால் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த அவ்வழியாக சென்ற ஒரு நபர் வீடியோ பதிவு செய்து அதை எனது மொபைல் போனுக்கு அனுப்பி வைத்திருந்தார். அதையும் நான் சார்பு ஆய்வாளரிடம் அனுப்பியுள்ளேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.28 16:02:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2025 LW- 4 PW- 2

Name : ஆண்டிவேல் ( கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : மங்காகவுண்டர்

Village : செந்துறை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 52/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது செந்துறை சாலையில் உள்ள 3337 என்ற எண் கொண்ட டாஸ்மாக் கடையில் உதவி விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். கடந்த 23.02.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் நான் கடையில் விற்பனை செய்து கொண்டிருந்தபோது, ராசு என்பவர் பல்க்காக 15 பெட்டி சரக்கு வேண்டும் என்று கேட்டார். மொத்தமாக சரக்கு கொடுக்கக்கூடாது என்று சொன்னதற்கு மூக்கனும், ராசு என்பவரும் கடை முன்பாக நின்று தகராறு செய்து கொண்டிருந்தார்கள். அதனால் எங்கள் கடையின் விற்பனையாளர் செல்வராஜ் என்பவர் அ.சா.1டம் தகவல் சொன்னார். பின்னர் அ.சா.1 அங்கு வந்து இவ்வாறு மொத்தமாக சரக்கு கொடுக்கமாட்டார்கள் என்று எதிரியிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் கூட்டமாக சேர்ந்துவிட்டார்கள். ராசு, மூக்கன், முத்துக்கிருஷ்ணன், அழகுராஜா, பொன்னர்,

துரைப்பாண்டி, ரமேஷ், சக்திவேல் வந்தார்கள். அதில் சக்திவேல், பொன்னர் ஆகியோர் போலீசாரை அடிக்க போனார்கள். பின்னர் அங்கு பிரச்சனையாகி சில பேர் விலக்கிவிட்டார்கள். கடையில் இருந்து 15 அடி தூரத்தில் பிரச்சனை நடந்தது. நான் வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்ததால் அதன் பிறகு நடந்ததை கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.28 16:02:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்